சேர்ந்து இருக்கிறது என்கிற தகவல் என்னிடத்தில் தற்போது இல்லை. அந்தக் குழு செயல்படவேண்டுமானால் புகையிலை மீது போடப்படும் செஸ் வரி மீண்டும் கொண்டு வரவேண்டும் என்கிற முறையில் மத்திய அரசுக்கு எழுதி இருக்கிறோம்.

Drinking Water Supply to Alandur area from river Palaru

*Q. No. 620.— Thiru N. KITTAPPA : Will the Hon. the Minister for Labour be pleased to state.

(a) whether it is proposed to augment the Drinking Water Supply for the Alandur Assembly Constituency and by bringing water from Palaru; and

(b) If so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) பாலாற்றுப்படுகையில் பழைய சீவரத்துக்கும், வாலாஜாபாத்துக்கும் அருகில் உள்ள இரண்டு நிலையங்களிலிருந்து நீர் எடுத்து ஆலந்தூர், பல்லாவரம் மற்றும் வழியிலுள்ள ஊர்களுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

குத்தாலம் ஒன்றியத்திலுள்ள குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி.

*வினா எண் 621—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குத்தாலம் ஒன்றியத்தில் குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பில் உள்ள குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மின் மோட்டார்கள் அனைத்தும் பழுதாகி பல மாதங்களாகியும் இதுவரை பழுது பார்க்கப்படாமல் இருப்பது உண்மையா ?

(ஆ) ஆம், எனில் பொது மக்களுக்கு குடிநீர் கிடைக்க மாற்று ஏற்பாடுகள் ஏதாவது செய்யப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) குத்தாலம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 22 மின்இறைப்பான்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாரியத்தின் பராமரிப்பில் உள்ளன. இவற்றில் 15 மின் இறைப்பான்களில் பழுதுகள் நிவர்த்தி செய்யப்பட்டு நன்றாக இயங்கி வருகின்றன. மீதமுள்ள 7 மின் இறைப்பான்களில் பழுதுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இவை கூடிய விரைவில் இயங்கப் படும்.

(முற்பகல் 9-40)

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, இந்த குத்தாலம் ஒன்றியத்தில் இருக்கிற மேல் நிலை தொட்டிகளிலே